# மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டதின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, 2022-23 ஆம் ஆண்டில் மக்காச்சோளமானது இந்தியாவில் சுமார் 9.5 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடபட்டு 33.62 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், தெலுங்கானா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மக்காச்சோளத்தை அதிகளவு பயிரிடுகின்றன. இந்தியா 2020-21 ஆம் ஆண்டு (அக்டோபர் 2021 - செப்டம்பர் 2022), 3.43 மில்லியன் மெட்ரிக் டன் மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்துள்ளது, இது முந்தைய ஆண்டில் 3.70 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்தது. இந்திய மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்வதில் வங்கதேசம் முதலிடத்திலும் அதைத் தொடர்ந்து நேபாளம் மற்றும் வியட்நாம், மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளும் உள்ளன.

தமிழ்நாட்டில் 2020-21 ஆம் ஆண்டில் 4 இலட்சம் எக்டர் பரப்பளவில் 25.64 இலட்சம் டன்கள் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் பெரம்பலூர்,சேலம், திண்டுக்கல், மதுரை, திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. வர்த்தக மூலங்களின் படி, தமிழ்நாட்டிற்கு மக்காச்சோளத்தின் வரத்தானது ஆந்திர பிரதேசம், கர்நாடகா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களிலிருந்து வருகிறது. இம்மூன்று மாநிலங்கள் தமிழ் நாட்டின் மக்காச்சோள தேவையை 30 சதவீதம் பூர்த்தி செய்கின்றன. கோழி மற்றும் கால்நடை தீவனத்திற்கான ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு தேவைகள் அதிகரிப்பதின் காரணமாக உள்நாட்டு சந்தையில் மக்காச்சோளத்தின் விலை சமீபகாலங்களில் அதிகரித்து காணப்படுகிறது.

விலை முன்னறிவிப்பு திட்டமானது, கடந்த 27 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காச்சோளம் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிபடையில், தரமான மக்காச்சோளத்தின் பண்ணை விலையானது மார்ச் முதல் ஏப்ரல் வரை குவிண்டாலுக்கு ரூ.2000 முதல் ரூ. 2200

ஆக இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய ஆலோசனையின்படி அடிப்படையில் சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி-0422-2431405

இயக்குனர் மற்றும் முனை அதிகாரி

தமிழ்நாடு பாசன விவசா நவீனமயமாக்கல் திட்டம்

நீர் தொழில் நுட்ப மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி-0422-243278


**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்

சிறு தானிய துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி-0422-2450507

# Price Forecast for Maize

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for maize.

The area under maize in India is 9.8 million hectares with a production of 33.62 million tonnes according to the Second Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare (2022-23). The leading states in the country for maize production are Karnataka, Madhya Pradesh, Maharashtra, Bihar, Telangana and Andhra Pradesh. During the 2021-22 marketing year (October 2021 – September 2022), India exported 3.43 million metric tonne of maize against 3.70 million metric tonne in the previous year. Bangladesh is the top buyer of Indian maize followed by Nepal and Vietnam, Malaysia and Thailand.

In Tamil Nadu, maize is cultivated in an area of 4 lakh hectare with 25.64 lakh tonnes of production during 2020-21. The major maize growing districts of Tamil Nadu are Perambalur, Salem, Dindigul, Madurai, Tiruppur and Ariyalur. According to the trade sources, maize arrivals to Tamil Nadu are from Andhra Pradesh, Karnataka and Bihar and these three states contribute nearly 30 per cent of the total demand of Tamil Nadu. The price of maize in the domestic market has increased due to high export and domestic demand for poultry and animal feed.

The Price Forecasting Scheme has analyzed the maize prices that prevailed in Udumalpet Regulated Market for the past 27 years. As per the analysis and market survey, the farm gate price of good quality maize during, March to April 2023 will be **Rs.2000-2200** per quintal. Hence, farmers are advised to take up appropriate marketing decision.

***For Marketing information details contact:***
*i).Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*ii).The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 0*
*03.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact**:*
*Professor and Head*
*Department of Millets*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-2450507*